தினத்தந்தி

### விபத்தில் மூளைச்சாவு அடைந்த

# ஆட்டோ டிரைவரின் உடல் உறுப்புகள் தானம்

## ஒரே நேரத்தில் 3 உறுப்புகளை பொருத்தி மியாட் ஆஸ்பத்திரி சாதனை

சென்னை, ஜன.20– விபத்தில் மூளைச்சாவு அடைந்த ஆட்டோ டிரைவரின் உடல் தானமாக வழங்கப்பட்டது. ஒரே நேரத்தில் 3 அறுவை சிகிச்சைகள் மூலம் உடல் உறுப்புகளை பொருத்தி மியாட் ஆஸ்பத்திரி சாதனை படைத்தது.

### ஆட்டோ டிரைவர்- மூளைச்சாவு

காஞ்சீபுரம் மாவட்டம் கொரிக்கால் கிராமத்தை சேர்ந்த முருகேசன் என்பவரின் மகன் ஸ்ரீதர்(வயது31). இவருக்கு மனைவியும், 2 வயது மகனும் இருக்கிறார்கள்.

ஆட்டோ டிரைவர் ஸ்ரீதர் காணும்பொங்கல் அன்று ஆட்டோவில் தனது ஊரில் இருந்து காஞ்சீபுரத்திறகு திரும்பிக்கொண்டிருந்தார். ஆனால் ஒரு குறுகலான இடத்தில் ஆட்டோ கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது. இதில் ஸ்ரீதருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால், காஞ்சீபுரம் அரசு மருத்துவமனையில், முதல் உதவி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அதைத்தொடர்ந்து உயர் மருத்துவ சிகிச்சைக்காக வேறு ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்பு, அன்று மாலையே மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த டாக்டர்கள், அவரது மூளைக்கு செல்லும் நரம்புகளில் பலத்த பாதிப்பு இருப்பதை, அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்தனர். 18–ந்தேதி இரவு 10 மணிக்கு மூளைச்சாவு என்று அறிவிக்கப்பட்டது.

### 6 பேருக்கு வாழ்வு கொடுத்தார்

அந்த துயரத்திலும், அந்த குடும்பத்தினர், ஸ்ரீதரின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வந்தனர். இதனால், 6 பேர்கள் பயன் அடைந்தனர். அவரது இதயம், ஈரல், 1 சிறுநீரகம், ஆகியவை மியாட் மருத்துவமனைக்கும், 1 சிறுநீரகம் மற்றும் கண்கள் சென்னையில் உள்ள மற்ற சில மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டன.

மியாட் மருத்துவமனையில், ஒரே நேரத்தில், இருதய மாற்று அறுவை சிகிச்சை, ஈரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆகியவை அருகருகே உள்ள ஆபரேஷன் தியேட்டர்களில் அன்று நள்ளிரவே நடந்தது. அவர் தானம் செய்த உறுப்புகள் மூலம் 6 பேர்கள் புது வாழ்வு பெற்றனர்.

### விழிப்புணர்வு

இந்த புனிதமான சேவைக்காக ஸ்ரீதரின் குடும்பத்தினருக்கும், இது குறித்த விழிப்புணர்வை உருவாக்கிய தமிழக அரசுக்கும், மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன் தாஸ் நன்றி தெரிவித்தார்.